IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, VADIPATTI.

| | | | |
|---|---|---|---|
| DEPOSITION OF WITNESS | | C.C.No | 1/2018 |
| | | PW's | 3 |
| NAME | Anantha Valli | CASTE | |
| S/O / W/O | | RELIGION | |
| VILLAGE | | CALLING | |
| TALUK | | AGE | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 15$^{th}$ day of July 2019

முதல் விசாரணை: 15-07-2019

நான் தற்போது சமூகநல அலுவலராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்று மதுரையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு மாவட்ட சமூக நல அலுவலராக பணிபுரிந்த போது 30.6.2016 அன்று சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலைய சார்பு ஆய்வாளரிடம் இருந்து கு.எண். 119-2015, பிரிவுகள் 294(பி), 506(1), 420 மற்றும் 4 of DP Act படி அனுப்பிய தபாலை ந.க.எண். 1898-ஆ4 2016 நாள்:23.9.2016 பெற்று வாதி ராஜாத்தி மற்றும் அவரது கணவர் சந்திரன் ஆகியவர்களுக்கு தபால் அனுப்பி வரதட்சணை கொடுமை எதுவும் நடைபெற்றதா என 18.8.2016 மற்றும் 1.9.2016 அன்று விசாரணை நடைபெற்றது. ஆஜர் ஆவதற்கு கேட்டு கொள்ளப்பட்ட வாதி ராஜாத்தி மற்றும் எதிர் மனுதாரர் பாண்டியம்மாள் ஆகியவர்கள் ஆஜர் ஆனார்கள். அவர்களை விசாரணை செய்ததில் இருந்து மேற்படி நபர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்றும் வரதட்சணை தொடர்பான துன்புறுத்தல் நடைபெறவில்லை என என்னுடைய விசாரணையில் தெரியவந்தது. இது சம்பந்தமான அறிக்கையை 23.9.2016 அன்று சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அந்த அறிக்கை அசாஆ.2 ஆகும். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:

என்னை இது சம்பந்தமாக என் அலுவலகத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் வந்து விசாரித்தார் தேதி ஞாபகமில்லை. மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது வரதட்சணை தொடர்பான துன்புறுத்தல் இல்லை என்று எனது அறிக்கையில் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் போலிசிடம் கொடுத்த (வாக்குமூலத்தில்161(3)) 18.8.2016 அன்று எதிர் மனுதாரர் சந்திரன் மற்றும் ஆஜர் ஆனார் என்று கூறியிருப்பது சரிதான்.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, VADIPATTI.

| | | | |
|---|---|---|---|
| DEPOSITION OF WITNESS | | C.C.No | 1/2018 |
| | | PW's | 4 |
| NAME | Murugan | CASTE | |
| S/O / W/O | Karuppaiya | RELIGION | |
| VILLAGE | | CALLING | |
| TALUK | | AGE | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the $15^{th}$ day of July 2019

முதல் விசாரணை: 15-07-2019

நான் கொத்தங்குளத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். அசா.1 ராஜாத்தி என்பவரை தெரியும் மற்றும் எதிரிகளை தெரியும். அசா.1க்கும் சந்திரன் என்பவருக்கும் திருப்பாச்சேத்தி காமாட்சி கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது நான் சென்றிருந்தேன். திருமணத்திற்கு 13 பவுன் நகையும் ரூ.50 ஆயிரம் ரொக்கமும் கொடுத்தார்கள். மேற்படி விபரம் தெரியும். திருமணத்திற்கு பின்பு அவர்கள் சோழவந்தானில் வசித்து வந்தார்கள். அதன் பிறகு ராஜாத்தியின் அப்பா முத்து என்பவர் தன்னுடைய மகள் குடும்பத்தில் சண்டை ஏற்பட்டு விட்டதாகவும் அது சம்பந்தமாக மானாமதுரை அனைத்து மகளிர் கா.நி. வைத்து பேச வேண்டும் என்று அழைத்தார். நான் அவர்களுடன் சென்று பேசிய போது எதிரிகள் அசா.1 ஐ வைத்து வாழ முடியாது என்று கூறினார்கள். அசா.1 சிறு வயதாக இருப்பதால் தனியாக கூட்டி சென்றாவது வாழ வையுங்கள் என்று சொன்னேன். அதற்கு எதிரிகள் சரி தனியாக கூட்டி சென்று வாழ்கிறேன் என்று தெரிவித்தார்கள். அதன் பிறகு அசா.1 ன் அப்பா தன்னுடைய மகள் மீண்டும் வீட்டிற்கு திரும்ப வந்து விட்டார் அவர்கள் அடித்து விரட்டி விட்டார்கள் என்று சொன்னார். மீண்டும் அவர்களுக்குள் சண்டை வந்ததாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:

போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அசா.1 ன் அப்பா கூப்பிட்டு தான் நான் இன்று வந்துள்ளேன். திருமணத்திற்கு என்ன என்ன நகை கொடுத்தார்கள் என்றால் கழுத்து நெக்கலஸ், செயின் போட்டார்கள். ரூ.50 ஆயிரம் பணம் கொடுக்கும் போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். ரூ.50 ஆயிரம் எந்த கட்டுகளாக கொடுத்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. போலிஸ் நிலையத்திற்கு பேச்சு வார்த்தைக்கு ஞானபன்றிதம், முத்துஇருளு, பாண்டித்துரை மற்றும் நான் சென்றோம். அசா.1 ன் அப்பா எனக்கு மாமா முறையாவார். புகார் கொடுக்க போகவில்லை போலிஸ் நிலையத்திற்கு பேச்சு வார்த்தைக்கு சென்றேன். பேசுன படி அசா.1 ஐ தனி குடுத்தினத்திற்கு கூட்டி சென்றார்கள். அதற்கு பிறகு நடந்தது எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொன்ன மாதிரி எதுவும் நடக்கவில்லை அசா.1 ன் அப்பா உறவினர் என்பதால் அவர்கள் சொல்லிக் கொடுத்ததை நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.